முரசொலி

ஆசிரியர்: மு. கருணாநிதி

முரசு: 5 | 6-2-59 | வெள்ளி | ஒலி: 27

புதுக்கோட்டையில் கூடுகிறது பொதுக்குழு, பிப்ரவரி 7, 8 தேதிகளில்!

"பாரத மணி"க் கொடியே; வருக!
பண்டிதரின் குலவிளக்கே; வருக!



கற்கள் பறக்கின்றன!

கண்டனச் சொற்கள் பொல பொலவென்று உதிர்கின்றன!

எங்கே என்று கேட்கிறீர்களா? கண்ணீரும் செந்நீரும் கொட்டி வளர்த்த காங்கிரஸ் கோட்டையின் மீதுதான்! "எதிரிகள் ஏமாந்தனர்! அழித்து விடுவோம்; அசைத்து விடுவோம்—என்று மன்ப்பால் குடித்தவர்கள் மருண்டோடும் காட்சியைப் பாரீர்! ஆழ்கடல் குமுறினாலும் — அகிலமே புரண்டாலும் அழிவில்லை எமக்கு!" என்று மார்தட்டிக் கொண்டார்களே 'மகாத்மா'வின் சீடகோடிகள்—அவர்கள் தலைநிமிர்ந்து நடமாடிய காங்கிரஸ் கோட்டைதான் இன்று கலகலத்து விடுமளவுக்குத் தாக்கப்படுகிறது—தகர்க்கப்படுகிறது!

காட்டுமிராண்டிகளினும்கொடியவர்கள் தொடுக்கின்ற பாணம் தொகை தொகையாகக் குவிகின்றன!

கள்ளமதி கொண்டோரினும் கேடுகெட்டவர்கள் நடக்கின்ற குருட்டுப் பாதையிலே இலட்சியங்கள் குழிதோண்டிப் புதைக்கப்படுகின்றன!

தேசிய இயக்கத்தைத் தோள் மேல் தாங்கிக் கொண்டிருந்தவர்கள் இன்று தேம்பியழுகிறார்கள், 'தேய்ந்து வருகிறதே நான் தேடிவைத்த செல்வம்' என்று புலம்பி அழுகின்ற ஊதாரியைப் பெற்ற சீமானைப்போல!

இதயத்தை இரும்பாக்கிக் கொண்டு இந்த இழிசெயலில் ஈடுபட்டவர்கள் காங்கிரசைக் 'கசப்பா'கக் கருதுகின்ற மாற்று முகாம் வாசிகளா?

பக்கத்திலிருந்தே பழி தீர்க்கும் சமுதாயத் துரோகிகளா?

அல்ல; அல்ல!

அவர்களேதான்!

தேசியப் பாலை உண்டு வளர்ந்து — காங்கிரஸ் தொட்டிலிலே ஆடிக் களித்து—இன்று சுதந்திர மண்ணிலே நடைபோடும் செங்கோலேந்திகளேதான்!

கதர்க் குல்லாய் தரித்தவர்கள்தான் கல்லெடுத்து வீசுகிறார்கள்! காந்திவழி நடப்பவர்கள்தான் கண்டனக் கணை தொடுக்கின்றார்கள்!

'கலைத்து விடுவோம்' என்றார் காந்தியார் அன்று! ஆனால் காற்றுள்ளபோதே தூற்றிக் கொள்ள விரும்பிய 'சர்வோதய' சித்தர்களோ அவர் போதனைகளையே கலைத்து விட்டனர்!

இலட்சியம் குலுங்கிய சோலை ஈமற்ற பாலையாகி விட்டது! இரும்பினும் வலிவான கோட்டை இடிந்து நொறுங்கும் நிலைக்கு உள்ளாகி விட்டது!

இந்த இக்கட்டான நேரத்தில் தான் சுதந்திர ஜோதி ஒளி குன்றி வருகிறதே என்று குமுறி எழுந்து, அதற்குச் சுடரேற்ற உழைத்துக் களைத்த தேபர் விலகிவிட்டார்! இந்திய உபகண்டம் முழுதிலும் சிதறிக் கிடக்கின்ற கோடிக் கணக்கான காங்கிரஸ்காரர்களின் ஏகத் தலைவர், நான்காண்டு காலம் பாடுபட்டும் பலனில்லையே — என்று பதைபதைத்து ஓடிவிட்டார்!

காங்கிரஸ் கோட்டையின் சிம்மாசனம் இப்போது புதிய தலைவருக்கு; நேருவின் புதல்வியாருக்கு இடம் கொடுத்திருக்கிறது!

"அறுபதாண்டு கால காங்கிரஸ் இயக்க வரலாற்றில் தலைமை பீடத்தில் அமரும் அருகதை பெற்ற நான்காவது பெண்மணியே! நானிலம் போற்றும் மனித குல மாணிக்கத்தின் குல விளக்கே! வருக! வருக!!" என்று காந்தீயத் தோழர்கள் மகத்தான வரவேற்பு தருகிறார்கள்!

ஆனால்,

அந்த அம்மையார் நுழைகின்ற வேளையில், கோட்டைக்குள்ளே குழப்பமும், குருட்டு எண்ணம் கொண்டோரின் ஆட்டமும் மட்டும் நடைபெறவில்லை! மனிதாபிமானத்தைக் கொன்று குவித்தவர்கள் இப்போது ஒருவருக்கொருவர் குத்திக் கொள்கிறார்கள்; வெட்டிக் கொள்கிறார்கள்!

கோடிக் கணக்கான காங்கிரஸ்காரர்களை ஒன்று சேர்த்து — நீதியையும் நேர்மையையும் காண வந்த அந்தப் புதிய தலைவருக்கு முன்னால் கொலைவெறி தாண்டவமாடுகிறது! 'நவகாளி'கள் நர்த்தனம் புரிகின்றன!

பெற்றவரின் பக்கத்திலேயே இருந்து, அவர் பெற்றுவரும் புகழைக் கண்டு வியப்பால் விரிந்திருந்த அவரது கண்களுக்கு முன்னால், அந்தப் புகழுக்குப் பின்னால் மறைந்து கொண்டிருக்கும் கொடுமைகள் புலப்படுகின்றன!

உதாரணத்திற்கு சில...

உத்தரப் பிரதேச காங்கிரஸ் ஊழலின் பிறப்பிடம்—இது உலகறிந்த ரகசியம்!

மந்திரிமார் அநேகரை மத்திய அரசுக்கு அனுப்பிவைத்த பெருமையைச் சுமந்து கொண்டிருக்கும் அந்தப் பூமிதான் இப்போது குலை நடுங்கச் செய்யும் செய்திகளின் உற்பத்தி பீடமாகத் தோன்றுகிறது!

அந்த மாநில உணவு அமைச்சர் மோகன்லால் கௌதம் என்பவரைக் கொலை செய்ய முயன்றதாக சதி வழக்கு ஒன்று இப்போது நீதிமன்றத்தின் முன்னே இருக்கிறது! அந்த வழக்கு விசாரணையின்போதுதான் திடுக்கிடும் தகவல்கள் சில வெளிப்பட்டிருக்கின்றன!

அமைச்சரைக் கொலை செய்ய சதி—அதுவும் இந்த அகிம்சாவாதிகளின் ஆட்சியில்! அறங்காக்க வேண்டிய அமைச்சருக்கு முன்னால் மரண வாசல் திறக்கப்படுவானேன்? அவரது உடலை கொலைக் கருவிகள் ருசி பார்ப்பானேன்? இந்த வேடிக்கையான வரலாறு வேதனையான உண்மைகள் பலவற்றைச் சொல்லுகின்றது!

குற்றவாளிகள் என்று கருதப்பட்டு, கீழ் வழக்கு மன்றத்திலிருந்து செஷன்ஸ் விசாரணைக்கு அனுப்பப்பட்டிருப்பவர்கள் 40 பேர்!

அவர்களில் இரண்டு பேர் காங்கிரஸ் எம். எல். ஏ.க்கள்!

பெரும்பாலோர் மாணவர்கள்!

அலிகாரிலேயுள்ள 'ஏகன்' என்ற கல்லூரியைக் கடந்து ஒரு கிராமத்துக்குச் சென்று கொண்டிருந்தபோது, ஆயுதம் தாங்கிய அநேகர் அமைச்சரின் மேல் பாய்ந்திருக்கின்றனர்—அமைச்சர் காயங்களுடன் தப்பியிருக்கிறார்!

காங்கிரஸ் அமைச்சரை, காங்கிரஸ் சட்ட மன்ற உறுப்பினர்களே கொலை செய்ய முயற்சிப்பானேன்? அதற்காக கல்லூரி மாணவர்களைத் தூண்டி விடுவானேன்?

இந்த வினாக்களுக்கு விடையாக திகைக்க வைக்கும் செய்தி ஒன்று வழக்கு மன்றத்திலே வெளியாகியிருக்கிறது!

இந்தக் கொலை முயற்சிக்குக் காரணம், அதற்கு முன்பு நடந்த கொடூரக் கொலை ஒன்றின் தொடர்ச்சிதானாம்!

இந்த நிகழ்ச்சிக்கு முன்னால் உத்தரப் பிரதேசத்திலுள்ள அலிகாரில் 'பிணம்' ஒன்று சாய்ந்ததாம்; ஒருநாள் இரவில் வெட்டி வீழ்த்தப்பட்ட அந்த பரிதாபத்திற்குரியவர் ரசாக்கர் பரம்பரையினரல்ல; 'மான்சிங்'கின் கும்பலைச் சேர்ந்தவரல்ல; கொலையையோ கொள்ளையையோ தொழி

[தொடர்ச்சி பக்கம்—7]

விற்பனையாகிறது!

நாங்கள் தமிழன்னைக்குச் சூட்டும் முத்தாரம்! இன்பத்தமிழ் இலக்கியக் கருவூலம்!!

கலைஞர் மு. கருணாநிதி அவர்கள் தீட்டிய

தமிழ்ச்செல்வம் "தேனலைகள்"

விலை ரூ. 1-50

முத்துவேல் பதிப்பகம், 77, மதுரைசாலை, திருச்சி. 8.

விற்பனையாளர்களுக்குத் தக்க கழிவு உண்டு

தனிப்புத்தகம் வேண்டுவோர் புத்தக விலையுடன் 25 புதிய காசுகள் சேர்த்து பணவிடை (M.O.) அனுப்புக

வெள்ளி 6—2—59 சென்னை

★ ஏடுகள் ★ என்ன செய்தன?

நல்ல ஏடுகள்தான் ஒரு நாட்டின் அகத்தைப் பிரதிபலிக்கும் கருவிகளாகும்! தமிழகத்தைப் பொறுத்தவரையில் நம் பண்பாட்டுக்கும் பழம் பெருமைக்கும் ஊறு தேடாத ஏடுகளுக்கு நல்ல வரவேற்புண்டு; மக்களின் மனத் தராசிலே நல்ல தீர்ப்பு பெற்று விட்ட அத்தகைய ஏடுகள் வெற்றி பவனி வருகின்ற காட்சியையும் காணுகிறோம்.

ஆனால், மொழி வளர்ச்சிக்கும், கலை யுணர்வுக்கும் வித்திடுகின்ற அத்தகைய ஏடுகள் உருவாகும் கதை மிகமிக வேதனை நிரம்பியதாகும். பத்திரிகைத் துறையிலே எண்ண முடியாது எதிர்ப்படுகின்ற இன்னல்களுக்கும் இடர்ப்பாடுகளுக்கும் ஈடு கொடுத்து—பண்பு வளர, கல்வி சிறக்க, நாட்டின் பெருமை உயர பாடுபடுகின்ற ஏடுகள் மிகச் சிலதான்; அவைகள் எப்பாடுபட்டேனும் துவளாமல் தேயாமல் தங்கள் பணியைச் செய்து வருகின்றன!

ஆனால் சமீப காலத்திலோ அத் தொண்டிலே ஈடுபட்டிருக்கும் ஏடுகளின் தொண்டைக் குழியை அழுத்துகின்ற கொடூரச் செயலில் ஈடுபட்டிருக்கிறது மத்திய அரசு!

அந்நியச் செலாவணி கட்டுப்பாடு இந்திய உபகண்டத்தில் குவித்திருக்கிற ஆபத்துகள் பலவாகும்; அதனால் பெருமளவு பாதிக்கப்பட்டு, அபாயகரமான கட்டத்திற்கு அடித்துத் துரத்தப்பட்டிருப்பது பத்திரிகைத் துறைதான்!

படகிலே ஓட்டைகள் இட்டுவிட்டு பயணத்தைத் துவங்கு—என்று மாலுமிக்கு ஆணையிட்டால் விளைவு என்னவாகும்? அதைப் போல பத்திரிகைத் துறையைக் கொன்று கூறுபோடுவதுபோல், அத்தியாவசியப் பொருளான காகிதத்திற்குக் கட்டுப்பாடு விதித்தது இந்திய அரசு! வெளிநாடுகளிலிருந்து விற்பனையாளர்கள் அச்சுக் காகிதம் இறக்குமதி செய்யக்கூடாது என்ற உத்தரவு வந்தவுடனேயே அச்சாணி முறிந்த வண்டியாகிவிட்டன அநேக ஏடுகள்! கள்ள 'மார்க்கெட்' வணிகர்களின் பெரு விலைக்கு ஈடு கொடுக்க முடியாத ஏடுகள் பல நொடித்து வீழ்ந்துவிட்டன!

நம் நாட்டு வெள்ளிக் காசுகள் வேற்று நாட்டுக்குச் செல்லுவதைக் குறைக்க வேண்டும்; ஆகவே இந்தியாவிலே 'நீபா' மில்லில் தயாராகின்ற அச்சுத்தாளை வாங்கிக் கொள்ளலாம்—என்று ஆறுதல் தந்தது அரசாங்கம். ஊழலுக்கும், உதவாக்கரை நிர்வாகத்துக்குமிடையே இப்போதுதான் தலைதூக்குகின்ற அந்த 'மில்'லில் தயாராவதோ பழுப்புக் காகிதம்! அதை விரும்பாதவர் அநேகர்; விரும்பி வாங்க முற்பட்டோருக்கும் ஏமாற்றம்! குறித்த காலத்தில் தேவையைப் பூர்த்தி செய்ய முடியவில்லை அந்த நிறுவனத்தால்!

இந்த இக்கட்டான நிலையில் வெளிநாடுகளிலிருந்து உபயோகத்திற்கு காகிதம் தருவிக்க அரசாங்கம் தந்து வருகின்ற அனுமதியிலும் அநேக தடைகள் போடப்பட்டன! தேவையைக் குறித்து கேட்கப்படுகின்ற விபரங்கள்—விளக்கங்கள் ஏராளம்! அவ்வளவையும் தந்த பிறகும் தேவையில் கால் பங்கு, அரைப் பங்கு என்ற அளவுக்குத்தான் அனுமதி தரப்படுகிறது; அதுவும் நீண்ட கால போராட்டத்திற்குப் பிறகு!

இப்படியாக தொல்லைகளின் நிலைக்களனாகிவிட்ட அநேக பத்திரிகைகள் லாபத்தை மட்டும் குறிக்கோளாகக் கொண்டிருந்தால் என்றைக்கோ குழியிலே புதையுண்டு போயிருக்கும்! நாட்டுக்கு உழைக்கும் நல்ல பண்பால் தடுமாறித் தத்தளித்து நடைபோட்டுக் கொண்டிருக்கின்றன அவைகள்!

ஆனால், இப்போது சதியின் அடுத்த கட்டமாக — அதிர்ச்சி தரும் ஆபத்தான பாணம் ஒன்றைத் தொடுக்கிறது, இந்திய அரசின் அஞ்சல் இலாக்கா!

பத்திரிகைகளுக்குத் தரப்பட்டிருந்த அஞ்சல் கட்டணச் சலுகையில் புதிய—ஆனால் புதிரான விதியொன்றை இணைத்திருக்கிறார்கள். அதுகண்டு வெகுண்டெழுந்த செல்வாக்குள்ள ஏடுகள் இந்திய அரசுடன் போராட்டமே துவங்கி விட்டன—அதற்கு வலுவற்ற ஏடுகள் 'தம் ஆயுள் தீர்ந்து விட்டதோ' என்ற அவல முடிவிற்கு வந்துவிட்டன!

இதுவரை குறைந்த கட்டணத்தில் பத்திரிகைகளை அனுப்ப வசதி அளிக்கப்பட்டு வந்தது. ஆனால், இனி அந்த வசதி தொடர்ந்து கிடைக்க வேண்டுமானால், பத்திரிகையில் 51 சதவீதம் அரசியல் இருக்க வேண்டுமாம்—இதுதான் அந்தப் புதிய உத்தரவு!

அரசியலை மட்டுமே முக்கிய குறிக்கோளாகக் கொண்டு நடைபெறுகிற ஏடுகளோ—செய்திகளை மட்டும் வெளியிடுகிற தின இதழ்களோ இந்த உத்தரவால் பாதிக்கப்படப் போவதில்லை!

ஆனால், இலக்கியத்திற்கு முக்கிய இடமளித்து — கதைகள், கட்டுரைகள் அநேகம் வெளியிட்டு—மக்களிடையே செல்வாக்கோடு உலவுகின்ற அநேக ஏடுகள் இதனால் பெருமளவு பாதிக்கப்படுகின்றன!

அரசியலுக்கு மட்டுமேதான் முதலிடம் தர வேண்டும் என்றால், அரசியலைத் தவிர வேறு எதையும் மக்கள் தெரிந்து கொள்ளக் கூடாது என்று பொருளா? அரசியலை மட்டுமேதான் இந்திய உபகண்டத்திலே சிதறிக் கிடக்கின்ற 40 கோடி மக்களும் தெரிந்து கொள்ள வேண்டுமா?

அப்படியானால், அரசியல் வாடையே படாமல் வளர வேண்டும் என்று அமைச்சர்கள் அடிக்கடி போதிக்கிறார்களே—அந்த மாணவர்கள் பத்திரிகைகளையும் படிக்கக் கூடாதா? ஆசிரியர்கள்—தொழிலாளர்கள்—கலைஞர்கள்—மருத்துவர்கள்—வழக்கறிஞர்கள் — முதலியோர் பிறகு அரசியல் கலப்பில்லாத ஏடுகளை எங்கு சென்று தேடுவார்கள்?

அஞ்சல் இலாக்காவின் திடுக்கிடும் உத்தரவு இத்தகைய புரியாத குழப்பங்களுக்கு இடமளித்துவிட்டது!

படியாதவர் தொகை நம் நாட்டில் அதிகம்; படித்தும் புரிந்து கொள்ள முடியாதவர்கள் தொகையும் அதிகம்! அப்படிப்பட்ட பாமர மக்களுக்குக் கதைகளின்மூலம் நாட்டு நிலையை விளக்க முடியும்; தேவையான போதனைகளையும் புகுத்த முடியும்!

தமிழகத்தைப் பொறுத்த வரையில், தமிழிலே காணப்படுகின்ற பழம் பெரும் இலக்கியங்களை மக்களின் முன்னால், எடுத்து வைக்கின்றன ஏராளமான இலக்கிய ஏடுகள்! உலகத்தின் மற்ற நாடுகளிலே காணக் கிடைக்கின்ற உயர்ந்த இலக்கியங்கள் தாய் மொழியிலே மொழி பெயர்த்துத் தரப்படுகின்றன! அறிவு வளர்ச்சிக்குத் தேவையான கருத்துச் செறிவுள்ள கதைகள் மக்களால் வரவேற்கப்படுகின்றன! அதனால்தான் செய்திகளுக்காக மட்டுமே நடத்தப்படுகின்ற தினசரிகள்கூட கிழமைதோறும் தனி மலர்கள் வெளியிடுகின்றன!

அந்த அளவுக்கு மக்களில் பெரும் பகுதியினரால் மகிழ்ச்சியுடன் வரவேற்கப்படுகின்ற இலக்கியப் பகுதியை குறைத்துவிடத்தான் வேண்டும்—என்ற அரசாங்கத்தின் கட்டளையில் என்ன குறிக்கோள் இருக்கிறது என்று அத்துறையில் ஈடுபட்டுள்ள எவருக்குமே புரியவில்லை!

ஆகவே இந்தப் புதிரான உத்தரவின் புரியாத இரகசியத்தைத் தேடி அலுத்த சகோதர ஏடுகள் அனைத்தும் இந்த உத்தரவைக் கடுமையாக எதிர்க்கின்றன. மேலை நாடுகளில் எல்லாம் பத்திரிகைகளைத்தான் நாட்டின் பெருமையைப் பரப்புகின்ற சாதனமாகக் கருதுகின்றனர்; தேவையான வசதிகளும், சலுகைகளும் அவைகளுக்குத் தரப்படுகின்றன!

ஆனால், இங்கோ இருக்கின்ற குறுகிய சலுகையையும் காரணமின்றிக் கல்லி எறிகிறார்கள்!

ஆகவே இந்தப் புதிய உத்தரவு இலக்கிய சுவையுணர்ச்சிக்குத் தடையாகும்; எழுத்தோவியர்களின் ஆக்கத்திற்கு இடையூறாகும்; பத்திரிகையாளர்களின் ஊக்கத்திற்கு ஊறு தேடுவதாகும்!

பத்திரிகைத் துறைக்குப் போடப்படுகின்ற இத்தகைய முட்டுக் கட்டைகள் மக்களின் அறிவு வளர்ச்சிக்கு இடப்படுகின்ற அணை என்பதை அரசாங்கம் உணரட்டும்! அஞ்சல் இலாக்காவின் இந்தத் திடீர் உத்தரவை திரும்பப் பெற வழி செய்யட்டும்!

ஃ

எது சினிமாக் கட்சி

சென்ற வாரத் தொடர்ச்சி:

"கோவையில் நடைபெற்ற காங்கிரசு மகாநாட்டின் போது சிவாஜி கணேசனை அழைத்து வந்து மேடையில் அமரச் செய்து பெருமைப்பட்டிருக்கிறார்கள். தலைவர்களுக்காக நடத்திய ஊர்வலத்தைவிட, சிவாஜி கணேசனுக்கு ஊர்வலம் நடத்தியதுதான் மிகைப்பட இருந்ததாக என்னிடம் சில காங்கிரஸ்காரர்கள்கூட விவரித்து வருத்தப்பட்டுக் கொண்டனர்; சிலர் பெருமைப்பட்டுக் கொண்டனர்.

"அண்மையில் கலைவாணர் நினைவு விழா நடைபெற்றது. அதில் எல்லா நடிக நடிகைகளும் கலந்துகொண்டனர். நானும் கலந்துகொண்டேன். அந்த விழாவிலே ஒன்றுக்கு இரண்டு மந்திரிகள் கலந்து கொண்டனர்.

"அமைச்சர் சுப்ரமணியம் சென்னையில் எம். ஜி. ராமச்சந்திரனுக்கு தங்க வாள் பரிசை அளித்தார்.

"எனவே அவர்களுக்குக் கலைத் துறையிலே ஈடுபட ஆசைதான்; ஆனால் அவர்கள் இரண்டு வேலைகளைச் செய்ய வேண்டியுள்ளது. ஒன்று—நம்மைக் கலைத்துறையிலிருந்து வெளியேற்றவேண்டும்; இரண்டாவது—அவர்கள் அதில் ஈடுபட வேண்டும்! இந்த இரண்டையும் செய்யத்தான் இப்படியெல்லாம் அவர்கள் பேசுகிறார்களே தவிர அவர்கள் கலை விரோதிகள் அல்ல!"

—சென்னை, கொட்டிமா நகர் பொதுக் கூட்டத்திலே அறிஞர் அண்ணா அவர்கள் ஆற்றிய சொற்பொழிவில் "எது சினிமாக் கட்சி?" என்பதற்கான நல்ல பதில் அடங்கியிருக்கிறது.

எட்டயபுரம் பாரதி விழாவில் சிவாஜி கணேசனை நடுவில் அமரச் செய்து, இரு புறமும் அமைச்சர்கள் அமர்ந்து பவனி வந்த காட்சியை காங்கிரஸ் பிரச்சாரப் பறைகள் ஏனோ அதற்குள் மறந்துவிட்டார்களோ; நாமறியோம்!

மெத்தக் கலை படித்தவர்போல பக்தவத்சலனார் சிவாஜி கணேசனைப் "பாரதி கணேசன்" என அழைக்க வேண்டுமென்று கருத்துரை வெளியிட்ட விந்தையைத் தமிழகம் மறந்தாவிட்டது?

ஔவையார் புகழ் கொடுமுடிக் கோகிலத்திற்கு மேல் சபையில் உலகம் சிரிக்கிற அளவுக்கு சூழ்நிலை உருவாகி, அதன் தலைவர் பெரியார் இரத்தக் கண்ணீர் வடித்து அறிக்கைகள் விடுவதையும் நாடு கவனித்துக்கொண்டு தானிருக்கிறது!

தி. மு. கழகத்தில் கலைத்துறையில் ஈடுபாடு கொண்டவர்கள் சிலர் இருக்கிறார்கள். கழகத்தின் இலட்சிய' வெற்றிக்கும் விடு

ஐ. நா. வில் அல்ல இந்தக் காட்சி—நடிகையின் அருகே பண்டிதர் தோன்றுவது நாகபுரி காங்கிரசில்!

கையில் விபூதிப் பையுடன் இடமளித்திருப்பவர்கள் யார்?

அவர்கள் எல்லாம் சினிமாக் கட்சிக்காரர்கள்தானா?

தி. மு. கழகத்தை சினிமாக் கட்சியென்று தூற்றிய முதல் கட்சியாம் திராவிடர் கழகத்து நண்பர்கள் 'இரத்தக் கண்ணீரி'லிருந்து 'தாமரைக் குளம்' வரையில் வந்து 'உலகம் சிரிக்கிறது' என்ற நிலைமை வரையில் வளர்ந்திருப்பதை மறைத்திட முடியுமா? திராவிடர் கழகத்திலுள்ள சினிமாக் கட்சிப் பிரிவினராலேயே

தலைப் போருக்கான அணிவகுப்பினை விரிவுபடுத்தும் முயற்சிக்கும் எல்லாத் துறையிலும் உள்ள நண்பர்களைப் போல கலைத்துறை நண்பர்களிடமும் உரிய பணியினைக் கழகம் விரும்புகிறதே தவிர, கலைத்துறையில் இருப்பவர்களாலேயே கழகம் ஒவ்வொரு அடியும் முன்னுக்கு எடுத்து வைக்கவேண்டும் என்று எதிர்பார்க்கவில்லை! கலைத்துறை

நண்பர்களும் தங்களால் மட்டும்தான் கழகம் வளர்கிறது; வாழ்கிறது என எண்ணித் தங்களைத் தாங்களே ஏமாற்றிக் கொள்ளவும் இல்லை!

இந்தத் துல்லியமான உண்மையைப் புரிந்துகொள்ள முடியாத மாற்றுக் கட்சி நண்பர்கள் 'தி. மு. கழகம் சினிமாக் கட்சி' என்று ஒரு வரியில் கிறுக்கிவிட்டுப் போய்விடுவது காண அவர்கள்மீது பரிதாபமே ஏற்படுகிறது.

படத்தைத்தான் பாருங்களேன்; எடின்பரோ கோமகன் நடனராணி கமலாவுடன் கைகுலுக்கும் காட்சியையும், அது கண்டு பேரானந்தங்கொண்டு கருணை வழியும் கண்களால் கண்ஜாடை வழியே கமலாவை கனம் சுப்பிரமணியம் வாழ்த்துகின்ற மாட்சியையும் பார்த்து, சுப்பிரமணியம் ஒரு சினிமாக் கட்சிக்காரர் என்று கூறி விடுவது?

அமைச்சர்கள் இல்லாத நடன விழாக்கள் குறைவு!

அவர்கள் இல்லாத படப்பிடிப்புத் துவக்க விழாகள் மிகக் குறைவு!

புதிய ஸ்டுடியோ — புதிய வர்ணப் பட 'லெபரடரி' — எல்லாமே அவர்களால்தான் திறக்கப்படுகின்றன!

'கும்பமேளா' என்றதும் குழப்பம் விளைவித்த சந்நியாசிகளின் நினைவு வருவது போல், நாகபுரி காங்கிரஸ் என்றதும் வட நாட்டு நடிகர்களின் ஞாபகமே முந்திக் கொண்டு வருகிறது. அவர்கள் நம்மைப் பார்த்து 'சினிமாக் கட்சி' என்கிறார்கள்.

தி. மு. கழகத்தில் சினிமாத் துறையில் ஈடுபட்டுள்ளவர்கள் உண்டு! ஆனால் சினிமாப் பளபளப்பில்—கொண்ட கொள்கையை மறந்து விடக்கூடிய குணம் படைத்தவர்கள் கிடையாது.

முதலில், கழகம்-நாடு—செயல் — தியாகம் — விடுதலை — சுதந்திரம்—நல்லாட்சி என்று கருதுகிற காளைகள்தான் தி. மு. கழகப் பாசறையில் அறிஞர் அண்ணாவின் அணிவகுப்பில் இடம்பெற்று நிற்கிறார்கள். அப்படிக் கருதாதவர்கள் இங்கு இடம் பெறவுமில்லை — இடம் பெறப் போவதுமில்லை! வெறும் மேனா மினுக்கிகளுக்கு — பளபளப்பு விரும்பிகளுக்கு — மாலைக்கு மட்டுமே கழுத்தை நீட்டுபவர்களுக்குத் தியாகச் சுடரொளி வீசுகின்ற தி. மு. க. பாசறை வீரர்கள், நிச்சயம் தலை வணங்கமாட்டார்கள். இதை உணரவேண்டும்; நம்மைப் பற்றித் தவறாக உளறிக்கொண்டிருப்பவர்கள்!

பணத்திற்கும் பகட்டுக்கும் பாத காணிக்கை வைத்துப் பல் இளித்து நிற்பவர்கள் காங்கிரசிலே ஏராளமாக இருக்கிறார்கள் என்பதற்கும்—அதன் தலைவர்களும்—பொறுப்பிலே உள்ளவர்களும் அப்படித்தான் என்பதற்கும்—'யார் சினிமாக் கட்சியினர்? எது சினிமாக் கட்சி?'—என்ற உண்மையை அறிவதற்கும் சென்ற இதழிலும் இந்த இதழிலும் தந்துள்ள ஆதாரங்களும், விளக்கப் படங்களுமே போதுமான பதில்களாகும் என நம்புகிறோம்!

மாஸ்கோ வானொலிக்கு மறுப்பு! இங்குள்ளோர் மனமென்ன இரும்போ?

"ஆகாஷ்வாணி"!

உலகத்து மொழிகளிலே காலத்தால் மூத்தவளாம் தமிழன்னையின் மானத்தைப் பறிக்க வந்த சொற்கோவை!

அகிலத்தைக் கட்டி யாண்ட அசகாய சூரர்களது உள்ளத்திலே ஆவேசத் தீயைக் கிளப்பி விட்ட ஐந்து எழுத்துக்கள்!

கதராடை அணிந்தோர்—தமிழினத்தில் பதராய் நடமாடுவோர்—மானத்தை அடகு வைத்து ஈனத்தொழில் புரிவதை எடுத்துக் காட்டி எக்காளம் செய்யும் வடக்கத்திச் சரக்கு!

புன்சிரிப்பு தவழ வாழ்ந்தாயே புலிக்கொடி பிடித்தவனே! நீ இன்று புறமுதுகிட்டதேன்? கறை படிந்துவிட்டதே நீ கட்டிக் காத்துவந்த இனப்பெருமையிலே?

உன்னுடைய கொடியிலேதான் வளைந்த வில்லிருந்தது; நடையிலே வளையாத மிடுக்கிருந்தது! அடுக்கடுக்காய் பகை வந்தாலும் அயராத நீ கூனிக்குறுகி, நாணிக் குனிந்து நடமாடுகிறாயே இன்று—அந்த நிலை எப்படித்தான் வந்தது?

'தோள் தட்டி வாழ்வேன்; எதிரிகள் தாள் பணியச் செய்வேன்'—என்று நீ எழுப்பிய போர் விருத்தத்திற்குப் பின்னணி முழக்கிற்றே விண் முட்டப் பறந்த வெற்றிக்கொடி; அதிலிருந்த கயல்தான் சாய்ந்ததோ; மற்றவர்கள் கபடந்தான் வென்றதோ?

குத்தவரும் வேல்களுக்கும்; உயிர் கொத்தவரும் வாள்களுக்கும் பதில் சொன்னாய்—'நத்திக் கிடப்பேனோ நானுன்னை' என்று எத்திக்கும் வீரப் பண் பாடினாய்! இன்று சிரித்திட்ட முகத்தோடு மாற்றான் விரித்திட்ட வலையிலே வீழ்ந்துபட்ட நிலை ஏனோ?

வெற்றி விருதுகள் குவித்தவனே! குவிந்துபோன தாமரையாய் குனிந்த தலை நிமிர்த்தடா!

—இப்படி உறைந்துபோன உதிரத்திலே புதிய உயிரேற்றுகிறது எங்கிருந்தோ ஓண்ட வந்த ஈனச் சொல்!

மானமொன்றே பெருமையென வாழ்ந்த இனத்திலே, பதவி மோகமென்ற மயக்கத்தில் வீழ்ந்தோர், 'தமிழ'னென்ற உணர்வு மறந்துவிட்டனர்—ஆகவே தேடி வந்தது, அந்த இந்திச் சொல்!

சொல்லோடு நிற்காது; நாளை 'செல்'லென்றால் நகராது; தமிழினத்தின் தலைமீது ஆதிக்கக் காலடியை அழுத்தாது விட்டு வைக்காது; ஆகவே வேண்டாம் இந்த வேற்று மொழி என்று நாடு கண்டிக்கிறது; ஏடுகள் எடுத்தியம்புகின்றன!

வானொலியிலே வீண் ஒலிகள் கிளம்புவது குறித்து நல்லோர் வெதும்புகின்றனர், அன்றும் இன்றும்!

வேதியர் எழுப்பும் வேத ஒலி எழும்பிற்று — வேதனையைப் புகுத்திற்று!

காற்றிலே கலந்து வரும் கீதத்திலே கடவுளர் நாமங்கள் மிதந்து வந்தன — கண்களைக் குளமாக்கின!

'ஆளப் பிறந்தவர்கள் நாங்கள்; ஆகவே அணுவுக்கணு பலன் தேவை எங்களுக்கு' என்று விளம்பரம் பெற்றனர்—நம் விழிகள் கலங்கின!

இருந்தாலும் இத்தனைக்கு மிடையேயும், கானல் வெளியிலே கனி, மலர்க்காடுபோல 'வானொலி' என்றவொரு வெல்லமென இனித்த நல்ல மொழிச் சொல் இருந்ததே; அதை ஏன் மாற்றினீர்கள்?

—இப்படிக் கொதித்தெழுந்து வினா யெழுப்பினர், முன்னோர் பதித்துப்போன தமிழ் இலக்கியம் கற்றோர் — அதன் இனிமை கண்டோர்!

மாற்றிவிடு அந்த மாற்றான் மொழியை — இல்லை; மாற்றிக் கொள்வோம் எங்கள் வழியை என்று அச்சுறுத்தினர்—அசைய வில்லை பதவித் தேனிலே ஈக்களாக மொய்த்துக் கிடப்பவர்கள்!

கவிஞர்கள், இனிக் கேளாது எம் குரல்—என்று மறுத்தனர்!

பேச்சுக்கு அழைப்பு பெற்றோர், எம் மூச்சுள்ள மட்டும் தமிழ் முழக்கத்திற்கு இடமில்லை—என்று வெறுத்தனர்!

கல்லையும் கரையச் செய்யுமே எமது இசை—உங்கள் நெஞ்சை இளக வைக்க வில்லையே — ஆகவே இனி அழைக்காதீர் எம்மையென அறிவித்து விட்டனர் இசைக் கலைத் துறையினர்!

உண்ணாத விரதமிருந்தார்—அரசினரின் உளுத்துப்போன இருதயக் கூட்டிலே இரக்கத்தைக் காணாது உடல் இளைத்தார்—உருக்குலைந்தார் — உணர்ச்சி வயப்பட்ட தமிழிளைஞர்—ரெங்கரத்தினம்!

"ஆகாஷ்வாணி என்றுதான் இருந்தால் என்ன? அதை வானொலியாக மாற்றுவதற்கு உண்ணாவிரதம் இருக்கத்தான் வேண்டுமா? நாளைக்கு வானொலியை ஆகாஷ்வாணியாக மாற்று என்று மீண்டும் யாராவது உண்ணாவிரதம் ஆரம்பித்தால் என்ன செய்வது? இப்படியே மாற்றிக் கொண்டே சென்றால் அரசினரின் நிலை தான் என்ன?..."

—இப்படி நரி யொன்றும் ஊளையிடவில்லை!

தமிழ்ப் பண்பாடு மறந்த பக்த வத்சலனார்தான் புதிய பல்லவி யொன்றைத் துவங்கியிருக்கிறார்! 'மடக்கிவிட்டோம் அவர்களை' என்று மார்தட்டியிருக்கிறார்!

சொத்தையைப் பொறுக்கியவன்தான் முத்தைத் தேடி மூழ்குவான்; அல்லாமல் ஆழ்கடல் பயணம் நடத்தி முத்தைக் குவித்தவன் சொத்தைதான் வேண்டுமென்பானா—மீண்டும் மூழ்கத் துணிவானா?

கத்துகடல் முத்துக்கும், கருங்கல் துண்டிற்கும் வித்தியாச முணராத அமைச்சர்கள் ஆளுகின்ற நாடு இது! ஆகவேதான் அடிமை நுகத்தடியைத் தானே அள்ளி எடுத்து மாட்டிக் கொள்ளுகிறார்கள், தமிழின் தரம் குலைக்க வந்த தருக்கர்கள்!

சதைக் கொழுப்பேறிய அத்தகையோரது கண்களுக்கு புதிய ஒளியைத் தருகின்ற செய்தி ஒன்றையும் நீட்டுகின்றோம்.

ருஷ்யத் தலைநகராம் மாஸ்கோ வானொலியில் வேற்று மொழிப் பிரிவு உண்டு; உலகத்து முக்கிய மொழிகளிலே எல்லாம் அங்கிருந்து நிகழ்ச்சிகள் ஒலிபரப்பப் படுகின்றன; அதுபோல் தமிழிலும் தரப்படும் நிகழ்ச்சியிலே என்றுமில்லாத புதியதோர் மாற்றம் இன்று காணப்படுகிறது!

"உலகெல்லாம் வாழுகின்ற தமிழ் மக்களுக்கு..."

—நிகழ்ச்சிகள் துவங்குமுன் இப்படித்தான் குறித்தார்கள் முன்னால். உலகெங்கும் உதிர்த்துவிட்ட நெல்லிக்காய் மூட்டைபோல் தமிழர்கள் சிதறிக் கிடக்கிறார்கள் என்ற உண்மையும் இதிலே தொக்கி நிற்கக் கண்டோம்!

உதிரம் கொட்டி உழைத்திட ஓடியவர்கள்; பழம் பெருமை குன்றாது வணிகத் துறைமேவிச் சென்றவர்கள்; கடல் கடந்து கல்விச் செல்வம் பெறப் புகுந்தவர்கள்—இப்படி எண்ணற்ற கோடியினர் அகிலத்தின் அங்கமெலாம் நிறைந்திருக்கும் காரணத்தால், "உலகெல்லாம் வாழும் தமிழ் மக்களுக்கு" என்று அழைப்பது கண்டு பெருமையோடு அனுமதித்தது தமிழினம்!

ஆனால், இன்றோ......இப்படிக் குறித்ததனாலே குறை என்ன கண்டார்களோ; அல்லது கறை படிந்த உள்ளத்தினர்தான் புது விளக்கமேதும் தந்தனரோ தெரியவில்லை — அப்படி அழகுமிக அழைத்த சொற்களை மாற்றி விட்டனர்!

பதிலாக இன்று,

"பாரதத் தமிழ் மக்களுக்கு..."

—என்ற புதியதொரு தொடக்க முறை புகுத்தப்பட்டிருக்கிறது!

"உலகெல்லாம்" என்ற சொல் "பாரத"மாகக் குறுகிவிட்டது!

நேற்றுவரை அகிலமெங்கும் சென்றிருந்த தமிழ் இனத்தார், அந்தி சாய்ந்ததும் கூண்டுக்குள் அடையும் பறவைக் கூட்டம் போல் 'பாரத'த்திற்குள் குடியேறி விட்டனரா?

ஏன் இந்த மாற்றம்?

நேற்றுவரை கொண்டிருந்த பழைய முறையிலே இன்று குற்றமென்ன கண்டீர்?

[தொடர்ச்சி பக்கம்—8]

'கண்ணதாசன் கவிதைகள்' வெளியீட்டு விழா!

★

இலக்கியச் செறிவும், இயக்கத்தின் குறிக்கோளும், விடுதலைத் தானைக்குத் தேவையான வீரமிக்க வரிகளும் கவிஞர் கண்ணதாசனின் கவிதைகளின் சிறப்புக்களாகும்! உயிரோட்டமுள்ள அவரது கவிதைகள் அனைத்தையும் ஒன்றாக்கி—ஒரே நூலாக்கி வெளியிட்டிருக்கின்றனர் காவியக் கழகத்தினர்.

"கண்ணதாசன் கவிதைகள்" என்ற அந்தப் பெரும் நூலின் வெளியீட்டு விழா சென்ற 1—2—59 அன்று சென்னை, வண்ணை, சர். தியாகராயர் கல்லூரி திறந்தவெளி அரங்கில் சிறப்புற நடைபெற்றது.

கவிஞர் கண்ணதாசன் அவர்களது பாடல்கள் சிலவற்றை திரையுலகப் பாடக—பாடகியர் பாடியபின், பன்மொழிப்புலவர் கா. அப்பாத்துரையார் அவர்கள் விழாவுக்குத் தலைமை வகித்தார்; தமிழுக்கு நல்ல சேவை செய்யும் கவிஞரது ஆற்றலையும் ஆர்வத்தையும் புகழ்ந்தார்.

அதையடுத்து, கண்ணதாசன் அவர்களின் தனித் திறமையையும், அவருடைய கவிதைகளின் சிறப்புகளையும் பாராட்டி, திருவாளர்கள் தேவநேயப் பாவாணர், மு. கருணநிதி எம். எல், ஏ., இராம. அரங்கண்ணல், வி. பி. இராமன், முருகு. சேதுராமன், க. அறிவழகன், கம்பதாசன், அன்பு கணபதி, பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம், மயிலை—சிவமுத்து—ஆகியோர் பேசினர்.

தமக்களிக்கப்பட்ட பாராட்டுகளுக்கு நன்றியுரைத்து கவிஞர் கண்ணதாசன் பேசுகையில், தனது முதல் கவிதைக்கு அறிஞர் அண்ணா அளித்த பாராட்டுரையே, தம்மை இத்துணை கவிதைகளையும் எழுதத் தூண்டுதலாக அமைந்தது என்று குறிப்பிட்டார். மேலும், தம்மை முதன் முதலில் 'கவிஞர்' என அழைத்துப் பாராட்டி, இயக்கத்திற்கு அறிமுகப் படுத்திவைத்தவர் தோழர் மு. கருணநிதி அவர்கள்தான் என்றும் குறிப்பிட்டார்.

அவருக்கு ஏராளமான அன்பளிப்புகளும், பாராட்டு இதழ்களும், மலர் மாலைகளும், வாழ்த்[illegible] செய்திகளும் குவிந்தன.



மனிதனின் கதை

பி. சி. கணேசன்

23. ஹூணர்கள் படையெடுப்பு

அன்புள்ள மாதவி,

ரோம் ராஜ்ய வீழ்ச்சிக்கான காரணங்களில் ஹூணர்களின் (Huns) இடையறாப் படையெடுப்பும் ஒரு முக்கிய மான காரணமாகும். அரேலியஸ் வாழ்ந்த காலம்வரை அவர்களை ரோம் ராஜ்ய எல்லையிலேயே நிறுத்தி வைத்திருந்தார். அவருடைய மரணத்துக்குப்பின் ரோம் ராஜ்யத்தைப் பாதுகாக்கும் பராக்கிரமசாலியை ரோம் தோற்றுவிக்கவில்லை. கி. பி. மூன்றும் நூற்றாண்டுக்குப்பின், வரலாற்றுச் சிறப்புப் பெற்ற ரோம் ராஜ்யம், சின்னா பின்னமாகிச் சிதறுண்டது. அந்தக் கைங்கரியத்தைச் செய்து முடித்தவர்கள் ஹூணர்களே.

இந்த உலக வரலாற்றிலேயே ஹூணர்களின் படையெடுப்புக்கு ஒரு முக்கியமான இடம் உண்டு. அநாகரிகக் காட்டுமிராண்டி இனமாக வாழ்ந்தவர்கள், உலகத்தின் மூலைமுடுக்குகளையெல்லாம் நடுங்க வைத்தார்கள். அந்த இனத்தின் பெயரைக் கேட்டவுடனேயே, பேரரசர்களெல்லாம் பெட்டிப் பாம்பாக அடங்கினர். ஹூணர்களின் பெரும்படை செல்லாத நாடில்லை; அவர்களின் அழிவு வேலைக்கு இலக்கு ஆகாத நகரமில்லை! சீனாவை சீரழித்தார்கள்; இந்தியாவை இதயங் கலங்க வைத்தார்கள்; பாரசிகத்தைப் பாலைவனமாக்கினார்கள்; ஐரோப்பாக் கண்டம் முழுமையுமே அவர்களுடைய படையெடுப்பால் அபயக்குரல் எழுப்பிக் கொண்டிருந்தது!

ஹூணர்கள் மத்திய ஆசியாவில் வாழ்ந்த நாடோடி இனம். அவர்கள் வாழ்ந்த இடத்தில் உணவு பற்றாக்குறையாகப் போனபொழுது, நல்ல பசுமை கொழிக்கும் உலகின் மற்ற பாகங்களின்மீது அவர்களுடைய பார்வை விழுந்தது. சாரை சாரையாகப் புறப்பட்டார்கள். கி. மு. 200—ல் மத்திய ஆசியாவில் ஏற்பட்ட கொடிய பஞ்சம், அவர்களைக் கிழக்கே சீனாவை நோக்கி விரட்டியது. கன்ஃப்யூஷியஸ் காலம்போல் நிலச்சுவான்தாரர்களின் கொடுமை சீனாவில் இருந்திருந்தால், ஹூணர்களின் படையெடுப்பால் சீனா வீழ்ந்திருக்கும். ஆனால் அப்பொழுதுதான் சீனாவில் பலம் பொருந்திய மன்னன் ஒருவன் தோன்றி, சீன சாம்ராஜ்யத்தை உறுதியான அடிப்படையில் நிறுவிக் கொண்டிருந்தான். அவனுடைய பெயர் ஷி—ஹூவாங்—டி என்பது. ஹூணர்களின் தொல்லையை நிரந்தரமாகத் தடுக்க உலக அதிசயங்களுள் ஒன்றான சீனப் பெருஞ் சுவரைக் கட்டிய மன்னனும் இவன்தான். இதைப் பற்றி முன்னரே—சீனாவைப்பற்றிக் குறிப்பிடும்போது உனக்கு எழுதியிருக்கிறேன்.

சீனப் பெருஞ் சுவராலும், சீனப் பேரரசன் ஷி-ஹூவாங்-டியாலும் கிழக்கில் தடுத்து நிறுத்தப்பட்ட ஹூணர்களின் கவனம் இயற்கையாகவே மேற்கு நோக்கித் திரும்பியது. ஹூணர்களில் ஒரு பிரிவினரும் அவர்களோடு நெருங்கிய உறவு கொண்டவர்களுமான குஷானர்கள், தெற்கே கி. மு. முதல் நூற்றாண்டில் இந்தியாவின்மீது படையெடுத்தனர். அவர்களுடைய படையெடுப்பு இந்தியாவின் வடமேற்குப் பகுதிகளில், ஆப்கனிஸ்தானம் — பஞ்சாப் போன்ற நாடுகளில், கிரேக்கர்களின் ஆட்சிக்கு முற்றுப்புள்ளி வைத்தது. இதன் விளைவாகக் கி. பி. முதல் நூற்றாண்டில் முதலாம் கனிஷ்கரை மன்னனாகக் கொண்டு இந்தியாவில் பலம் பொருந்திய கனிஷ்க சாம்ராஜ்யம் தோன்றியது. மேற்கத்திய நாடுகளோடு இந்தியாவின் தொடர்பு குறைந்து, சீனாவுடன் உறவு பெருகியது.

இதற்கிடையில் ஹூணர்கள் மேற்கு நோக்கியும் படையெடுத்தார்கள். கி. பி. முதலாம் நூற்றாண்டில் அவர்கள் ஐரோப்பாவினுள்ளும்கூட நுழைந்தார்கள். நாடோடிகளாக ஐரோப்பாவில் திரிந்த ஆரியர்களையும், கோத்தியர்களையும் வென்று, ரைன், டான்யூப் நதிக்கரைகளை அடைந்தனர். வேற்று இனங்களைத் தட்டிக் கொடுத்து, எல்லையை ரோமானியர்கள் சாமர்த்தியமாகப் பாதுகாத்துக் கொண்டனர். சீக்கிரமே ரோம் சாம்ராஜ்யம் இருபெரும் பகுதிகளாகப் பிரிந்தது. ஒரு பகுதிக்கு ரேவன்னாவும் மற்றொரு பகுதிக்கு கான்ஸ்டான்டிநோபிலும் தலைநகரங்களாயின. இது கி. பி. நான்காம் நூற்றாண்டில் நடந்தது. விரிந்து பரந்த ராஜ்யத்தை ஒரு மத்திய சர்க்கார் நிர்வாகம் செய்ய முடியாத பலவீனத்திலிருந்தே இது விளைந்தது. அப்பொழுது ரோம் சாம்ராஜ்யம் கிழக்கே ஆசியா மைனரிலிருந்து மேற்கே ஸ்பெயின் வரையில் விரிந்து பரவியிருந்தது என்பதையும் நீ மறந்து விடக்கூடாது.

ஆகவே நிர்வாக வசதி கருதி இரு பிரிவுகளாகப் பிரிந்து, இரண்டு வெவ்வேறு தலைநகரங்களைக் கொண்டு, இரண்டு அரசாங்கங்களே நடந்தன. ஆனால், ஹூணர்களோ இந்த இரண்டு பிரிவுகளையுமே பலமாகத் தாக்கினர். கி. பி. ஐந்தாம் நூற்றாண்டில் ஹூணர்களுடைய தொல்லை சிகரத்தையே எட்டிப் பிடித்தது. அதற்குக் காரணமானவன் அழிவின் ஏகப் பிரதிநிதியாய் சரித்திரத்தில் கருதப்படும் ஹூணர்களின் தலைவனான அடில்லாதான்!

"என் கால்பட்ட இடத்தில் புல்கூட முளைக்காது!" என்று வீரம் பேசியவன் அடில்லா. கொலை, கொள்ளை, கொளுத்துதல் ஆகியவையே அடில்லாவின் போர் முழக்கமாக இருந்தது. கி. பி. 450—ல் ஐரோப்பாவில் பெரிய பூகம்பமே ஏற்பட்டது; கீழ்வானில் வால் நட்சத்திரம் தோன்றியது; சந்திர கிரகணம் தோன்றியது; ரோம் நகரில் ஒருநாள் முழுதும் ரத்த மழையே பெய்ததாகப் பேசிக் கொண்டார்கள். இந்த நிகழ்ச்சிகள் போதாதென்று, இதைவிடப் பயங்கரமான சேதியொன்று வந்து சேர்ந்தது. அழிவு வீரன் அடில்லா வடதிசையிலிருந்து பெரும் படையுடன் வந்து கொண்டிருக்கிறான் என்பதுதான் அச்செய்தி. பூகம்பமும் புயலும் கண்டு அஞ்சாத மக்கள், அடில்லாவின் பெயரைக் கேட்ட மாத்திரத்திலேயே அஞ்சி நடுங்கினர்!

அடில்லாவின் ஆணையால் ஐரோப்பிய நகரங்கள் அழிந்து சாம்பல் மேடாயின!

அடில்லா பிறந்த இடமே சற்று வேடிக்கையானது. ஓடும் ரதத்திலே பிறந்தவன் அவன்; ரோம் நாட்டு வைரியாக வளர்ந்தான். போட்டிக்காரர்களைக் கொன்று, பேரரசர்களைக்கூட போரிலே வென்று, சிதறிக் கிடந்த பல ஹூண இனங்களை ஒன்றுபடுத்தி மாபெரும் பேரரசை நிறுவியவன் அடில்லா. கொடுமையின் பிம்பமாக ஐரோப்பிய வீதிகளில் உலவினான். இரத்த வாடையே அவன் விரும்பி ஏற்றுக் கொண்ட மணமாக இருந்தது. தேவாலயங்களை இடித்தான். சிலுவைகளைத் தீயிட்டுக் கொளுத்தினான். பாதிரிகளைச் சித்திரவதைகளுக்கு உள்ளாக்கினான்.

கி. பி. 451—ம் ஆண்டிம் அடில்லாவுக்கும் ரோமானியர்களுக்குமிடையே செலான்ஸ் சமவெளியில் (Chalons) மிகப் பயங்கரமானதொரு போர் நிகழ்ந்தது. சுமார் மூன்று லட்சம் பேர்கள் அந்தப் போரில் கொல்லப்பட்டனர். முடிவில் அடில்லா தோற்றுப்போய் போர்க்களத்தை விட்டே ஓட்டம் பிடித்தான். தோல்வியின் விளைவை ஹூணர்களில் உள்ளபடி உணர்ந்தவன் அடில்லா ஒருவனே! மற்ற போர் வீரர்களெல்லாம் களத்திலே தோற்றாலும், இரதங்களிலும் குதிரைகள்மீதும் மூட்டை மூட்டையாக ஏற்றிச் செல்லப்படும் பொன்னையும் பொருளையும் கண்டு, அதையே வெற்றியென எண்ணி உள்ளம் பூரித்தனர்.

இந்த யுத்தத்தால் அடில்லா பல உண்மைகளை அறிந்து கொண்டான். கட்டுப்பாடும் ஒழுங்குமே ரோமானியர்களுக்கு வெற்றியைத் தேடித் தந்தது என்பதை உணர்ந்தான். அவர்களுடைய மதவுணர்வும், அவர்

[தொடர்ச்சி பக்கம்—8]

சென்னை நகராட்சி மன்றத் தேர்தல்

தேர்வுக் குழுவும்-நடைமுறைகளும்

1. சென்னை நகராட்சி மன்றத் தேர்தலில் போட்டியிட வாய்ப்பும், வசதியும், விருப்பமும் கொண்டு இசைவு கோரும் தோழர்கள் கீழ்க்கண்டவாறு அமையும் தேர்வுக் குழுவிடம் இசைவு பெறவேண்டும்.

2. தலைமைக் கழகப் பிரதிநிதிகள் இருவர், (தோழர்கள் மு. கருணாநிதி, கே. ஏ. மதியழகன்) சென்னை மாவட்டத்தைச் சார்ந்த சட்ட மன்ற உறுப்பினர்கள் மூவர், (தோழர்கள் க. அன்பழகன், ஏ. வி. பி. ஆசைத்தம்பி, தோழியர் சத்தியவாணிமுத்து) சென்னை மாவட்டக் கழகத் துணைச் செயலாளர், (தோழர் கோ. செங்குட்டுவன்) சென்னை மாவட்டக் கழகத்தால் தேர்ந்தெடுக்கப்படும் கழக உறுப்பினராயுள்ள பிரதிநிதிகள் ஐவர்—ஆகிய பதினொரு பேர்கள் கொண்டது தேர்வுக் குழுவாகும்.

3. தலைமைக் கழகப் பிரதிநிதியான தோழர். மு. கருணாநிதி அவர்கள் தேர்வுக் குழுவிற்குத் தலைமைதாங்கி நடத்துவார்கள்.

4. சென்னை மாவட்டக் கழகம் 15—2—59—ஆம் நாளுக்குள்கூடி, தேர்வுக் குழுவிற்கான ஐந்து பிரதிநிதிகளைக் கழக உறுப்பினர்களிலிருந்து தேர்ந்தெடுத்துத் தலைமைக் கழகத்திற்கு அறிவிக்கவேண்டும்.

5. தேர்தலில் போட்டியிட விரும்பும் கழகத் தோழர்கள் தங்கள் தங்கள் விண்ணப்பத்தாளைத் தேர்வுக் குழுவின், பரிசிலனைக்காகச் சென்னை மாவட்டக் கழகத் துணைச் செயலாளரிடம் 15—2—59—ஆம் நாளுக்குள் அனுப்பி வைக்கலாம்.

6. விண்ணப்பங்களைப் பரிசிலனை செய்து ஏற்ற முடிவெடுத்துத் தலைமைக் கழகத்திற்கு அறிவிக்க, தேர்வுக் குழு, 22—1—59—ஆம் நாள், சென்னை 'அறிவக'த்தில் கூடும்.

'அறிவகம்', சென்னை 13
2—2—1[illegible]

—தலைமைக் கழகம் (தி.மு.க.)

2-ம் பக்கத் தொடர்ச்சி....

தியணைக்க முடியாது திணறி ஓடினர் தேபர்....

மருத்துவர்களே கையை விரித்தனர்; இனி மருந்தெங்கே தேடுவீர்?

லாகக் கொண்டிருந்த கொடியவருமல்ல!

அவரும் காங்கிரஸ்காரர்தான்!

அலிகார் காங்கிரஸ் கமிட்டியிலே செல்வாக்கு பெற்றிருந்த ஒரு பிரமுகர் மூல்சந்த்—அவர்தான் மூர்க்கத்தனமாக சாவுருக்கு அனுப்பப்பட்டாராம்! 'தொலைத்துவிடத்தான் வேண்டும், அந்த தொல்லை கொடுக்கும் 'மனிதனை' என்று வெஞ்சினத்திற்கு வழியமைத்துக் கொடுத்தது அங்கே வளர்ந்திருந்த கட்சிக் கோஷ்டிச் சண்டைதான்!

காலமெல்லாம் காங்கிரசுக்கென்று உழைத்தவர் மூல்சந்த்; அந்த உத்தமர் கொலை செய்யப்பட்டதற்கு யார் காரணம்—என்று வெகுண்டெழுந்தது ஒரு கும்பல்! ஆத்திரத்தால் கொதித்திருந்த அந்தக் கும்பலுக்கு முன்னால் மற்றொரு கும்பல் தெரிந்தது; அதைச் சேர்ந்த மோகன்லால் கௌதம்தான் காரணகர்த்தா என்ற உண்மையும் புரிந்தது!

அப்புறமென்ன? நேரம் பார்த்திருந்த மூல்சந்த் கோஷ்டியினர் அமைச்சரைத் தனியிடத்தில் தடுத்து நிறுத்தி வஞ்சம் தீர்த்துக் கொள்ள முயன்றிருக்கின்றனர்!

ஒரு காங்கிரஸ்காரரின் பிணம் வீழ்ந்தது; அதனால் காங்கிரஸ் அமைச்சரே தாக்கப்பட்டார்; ஆகவே இரண்டு காங்கிரஸ் எம். எல். ஏ.க்கள் கைதிக் கூண்டிலே நிற்கிறார்கள்!

அமைச்சர் தப்பிவிட்டார் — ஆனால், காங்கிரஸ் கமிட்டிக்குள்ளேயே இரு கோஷ்டிகளும்; அந்த கோஷ்டிகளுக்குள்ளேயே கொலைவெறி தாண்டவமாடும் கேடுகெட்ட உண்மையும் — நீதிமன்றத்திலேயிருந்து தப்பவில்லை; மக்கள் மன்றத்தின் கண்களிலிருந்தும் தப்பிவிடவில்லை!

அதுமட்டுமல்ல...

விட்டுக்குள்ளே புகுந்து கலகம் செய்வதும், கண்ணிலே பட்டோரை — கையிலே சிக்கியோரை அடித்து நொறுக்குவதும்கூட காங்கிரஸ் பள்ளிக்கூடத்தில் கற்றுத் தரும் புதிய பாடமாகிவிட்டது இப்போது!

இப்படிப்பட்ட இழிவான கதை ஒன்று ஆந்திரத்தில் நடந்திருக்கிறது!

ஆந்திரப் பாராளு மன்ற காங்கிரஸ் உறுப்பினர் வி. ராமசாமியின் வீட்டில் ஒருநாள் திடீரென்று ஒரு கும்பல் நுழைந்ததாம்! எதிர்பாராத விதமாக அவரைப் பிடித்திழுத்து அடித்தார்களாம்! இந்தக் கொடுமையைக் கண்டு கொதித்தெழுந்து கதறிய அவரது மனைவியாரையும் அடித்துப் போட்டனராம்! பெற்றவர்கள் படும் சித்திரவதையைக் கண்டு புலம்பிய அவரது மகனும் கடுமையாகத் தாக்கப்பட்டாராம்!

பட்டப் பகலில் நடைபெற்றிருக்கிறது, இந்த பயங்கரச் செயல்!

கையிலே தீவட்டிகள் ஏந்தி; உள்ளத்திலே தீய எண்ணங்கள் சுமந்து வந்த கொலைக்கு அஞ்சா கொள்ளைக்காரர்கள் அல்ல இந்தக் கொடுமையைச் செய்தது!

அவர்களும் காங்கிரஸ்காரர்கள்தான்!

அதற்குக் காரணமும் ஆந்திரக் காங்கிரசிலே அழியாது நிலவி வருகின்ற கோஷ்டிச் சண்டைதான்!

ஆந்திர மாநில சட்ட சபையிலே மந்திரி சபைக்கு எதிராக காங்கிரசிலேயே அதிருப்தியாளர் கும்பல் ஒன்று தோன்றியிருந்தது! அதை அழித்துவிட நேரு, தேபர் உள்ளிட்ட காங்கிரஸ் பெருந் தலைவர்கள் எவ்வளவோ முயன்றனர்; பலன் என்னவோ பூஜ்யம்தான்!

அந்த அதிருப்தியாளர்களின் தலைவரான டாக்டர் சென்னா ரெட்டி என்ற உறுப்பினர் ஆந்திர அரசியலில் மலிந்து கிடக்கிற ஊழல்களை — மந்திரிகள் ஆட்சிபீடத்தை தங்கள் சுகபோக 'சொர்க்கமா'க்கிக் கொள்ளுகிற கொடுமையை ஒளிக்காமல் பறைசாற்றினர். ஆகவே திடீரென்று காங்கிரஸ் மேலிடம் அவரைக் கட்சியிலிருந்து மூன்று ஆண்டுகளுக்கு ஒதுக்கி வைத்தது. ஆனால், சென்னா ரெட்டி, தானே காங்கிரஸ் சட்ட மன்றக் கட்சியிலிருந்து விலகி, தனியான அமைப்பு ஒன்றை இன்று உருவாக்கிக் கொண்டிருக்கிறார். அவரைத் தொடர்ந்து இன்னும் 40 சட்ட மன்ற உறுப்பினர்கள் காங்கிரசை விட்டு வெளியேறி விட்டனர்!

இந்த உட் பூசல்களில் ஒரு கட்டமாகத்தான் பாராளு மன்ற உறுப்பினர் ராமசாமி தாக்கப்பட்டிருக்கிறார்! இந்தக் கொடுமையைக் கேட்க 'நாதி' யில்லையே என்பதற்காக அவர் உண்ணாவிரதமும் இருந்திருக்கிறார்!

குறிப்பாக, உதாரணத்திற்குத் தரப்படுகின்றன இந்த இரண்டு மாநிலக் குழப்பங்கள்!

இதே நிலைதான் காங்கிரஸ் அரசு கட்டிலில் அமர்ந்திருக்கும் மற்ற மாநிலங்களிலும் நிலவி வருகின்றன!

அங்கெல்லாம் கத்தி, கேடயங்கள் ஏந்தி களத்திலே குதிக்கவில்லை என்பது உண்மைதான்!

ஆனால், சொற்களால் ஒருவருக்கொருவர் தாக்கிக் கொள்ளும் 'சுவை'யான நிகழ்ச்சிகள் பல மலிந்து விட்டன! அடுத்திருந்து ஆழக் குழி வெட்டும் ஆபத்தான செயல்களும் மேலிடத்தின் கண்டிப்புக்கிடையே நடந்து கொண்டுதான் வருகின்றன!

அதன் விளைவாகப் பலர் காங்கிரஸ் கோட்டையிலிருந்து கழுத்தைப் பிடித்து வெளியே தள்ளப்படுகின்றனர்; அநேகர் மேலிடத்தின் தயவோடு திரைமறைவில் தங்கள் 'திருப்பணி'யை நடத்திக் கொண்டிருக்கின்றனர்!

காங்கிரசிலிருந்து வெளி நடப்பும்—வேண்டாதோரை சொல்லால் தாக்கிக்கொள்ளும் நிகழ்ச்சியும் — அன்றாட சம்பவங்களாக இருந்து வந்தன.

ஆனால், இப்போது காங்கிரஸ் கோட்டையைக் கொலைக்களமாக மாற்றுகின்ற கொடிய சம்பவங்கள் மலிந்துவிட்டன!

பயங்கரவாதிகள்—

பழிக்கஞ்சாக் கொடியவர்கள்—

ஆயுதம் ஏந்தி அகப்பட்டோரை அடித்து வீழ்த்தும் கொடூர உள்ளம் கொண்டவர்கள்—

கொல்லவும் பின் வாங்காத பொல்லாத குணம் படைத்தவர்கள்—

இத்தகையோர் நீதிக்கும் நேர்மைக்கும் பயப்பட்டு — நல்லவர் முகத்தில் விழிக்க வெட்கப்பட்டு —விலங்கைப்போல் வனாந்திரங்களில் மட்டும் திரிந்து கொண்டிருக்கவில்லை!

அவர்களைப் போன்றோர் காங்கிரஸ் கோட்டைக்குள்ளும் வாசம் செய்கிறார்கள்!

ஏனென்றால் காங்கிரஸ் கோட்டை இன்று பாழ் மண்டபமாகிவிட்டது! அதன் கதவுகள் உளுத்து. உடைந்துவிட்டன! அது அகல வாய் பிளந்து திறந்து கிடக்கிறது! கொள்கைக்காக உயிர் கொடுக்கவும் தயார்— என்றவர்களும் அதிலே நுழைந்தார்கள்; இப்போது கொலை வெறி கொண்டவர்களையும் அது 'வருக, வருக' என்று வரவேற்கிறது!

இந்த பயங்கரச் சூழ்நிலையில் தான்—அதை நேர்வழி அழைத்துச் செல்லும் பெரும் பணியைத் தலையில் சுமந்து கொண்டு— தலைமைப் பீடத்தில் அமர்ந்திருக்கிறார், திருமதி இந்திரா காந்தி!

புதிய 'நர்ஸ்' நுழைந்திருக்கிறார்—புரையோடி மூடை நாற்ற மெடுக்கும் புண்ணுக்கு சிகிச்சை செய்ய!

மருத்துவர்களே கைவிரித்து விட்டனர் — இந்த 'நர்சால்' என்ன செய்துவிட முடியும்?

பொறுத்திருந்து பார்ப்போம்!



கல்வி இலாக்காவின் கவனத்திற்கு

ஒரு கடிதம்!

ஒரத்தநாடு,
(தஞ்சை மாவட்டம்)
28—1—59.

அன்புள்ள ஆசிரியருக்கு,

வணக்கம்.

'வருங்கால இந்தியாவின் சிற்பிகள்' என்று சொல்கிறீர்களே; அந்த சிற்பிகளில் ஒருவனும்—பள்ளி மாணவனுகிய நான் இக் கடிதத்தை எழுதுகிறேன். இல்லை; என்னுடைய உள்ளத்து வேதனைக்கு வார்த்தை வடிவம் கொடுத்து உங்களிடம் அனுப்பி வைக்கிறேன்.

கல்விக்கென்று ஒரு இலாக்காவும், அதற்கென்று ஒரு அமைச்சரும், அவர் ஆணையை நிறைவேற்ற ஏராளமான அதிகாரிகளும் இருக்கின்ற நேரத்திலும் மாணவருலகத்தின் ஏராளமான குறைபாடுகள் தீர்க்கப்படாதிருக்கும் கொடுமையை உங்கள் ஏட்டின் வாயிலாக மற்றவர்கள் உணர்ந்துகொள்ள வேண்டுமல்லவா?

நான் ஒரத்தநாடு, கழக 'உயர் நிலைப் பள்ளியில் படிக்கிறேன். எங்கள் பள்ளியில் மாணவர்களுக்கான தனிப் பாடமாக பொறி இயற்கலையும், விவசாயமும் இருக்கிறது. கடந்த பத்து ஆண்டுகளாக இப்பள்ளியில் விவசாயப் பகுதி ஆசிரியராகப் பணியாற்றி வந்த திரு. கே. ஆர். முத்துகோபால் பி. எஸ்ஸி., என்ற ஆசிரியர் பட்டுக்கோட்டை உயர் நிலைப் பள்ளிக்கு மாற்றப்பட்டுவிட்டார்!

இது நடந்தது சென்ற ஜூன் திங்களில்—அதாவது கோடை விடுமுறைக்குப்பின் பள்ளி திறந்த உடனேயே! ஆனல் இக்கடிதம் எழுதுகின்ற இன்றுவரை (29—1—59) அந்தப் பகுதிக்கு வேறு ஆசிரியர் எவருமே நியமிக்கப்படவில்லை!

பள்ளி திறந்து ஆறு மாதங்களுக்கு மேலாகின்றன — அரையாண்டுத் தேர்வும் நடந்து முடிந்துவிட்டது— ஆனல், அந்தப் பகுதி ஆசிரியர் நாற்காலி காலியாகவே கிடக்கிறது! அப்போதைக்கப்போது 'ஆக்டிங்' வேலைக்காக வருகின்ற ஆசிரியர்கள் அநேகரை உட்காரவைத்து அனுப்பிக் கொண்டிருக்கிறது!

இத்தனைக்கும் அப்பகுதிக்கு மாணவர்கள் இல்லாமலில்லை. நான்காம் படிவத்தில் 16 பேர்—ஐந்தாம் படிவத்தில் 12 பேர்—பள்ளி இறுதி வகுப்பில் 10 பேர்—ஆகிய 38 மாணவர்களும் இன்றுவரை தனியான ஆசிரியரிடம் முறையாகக் கற்கவில்லை!

எதிர்கால வாழ்க்கைக்கு ஏதாவது பலன் அளிக்காதா என்ற ஆவலின் காரணமாகத்தானே அந்தத் தொழிற் கல்வியை அவர்கள் கற்க விரும்பினர்கள்? அந்த ஆசையை நசுக்கிப் போடும் இந்த அலட்சியத்திற்கு யார் பொறுப்பாளி?

இன்னும் மூன்று மாதங்களில் முழுத் தேர்வு எழுத இருக்கிறர்கள் அந்த முப்பத்தி எட்டு மாணவர்களும்! ஆசிரியர் இல்லை; வகுப்பிலே பாடம் கிடையாது; ஆனல் தேர்வு மட்டும் தவறாது உண்டு!

பரிதாபத்திற்குரிய அந்த மாணவ நண்பர்களின் 'தலைவிதி'யை நிர்ணயிக்கின்ற கல்வி இலாக்காவின் இந்த ஊழல் நடத்தைகளை 'ஏன்' என்று கேட்க யார் இருக்கிறர்கள்?

இங்ஙனம்,
"ஒரு மாணவன்"

"தனி அரசு"

தினசரிக்கு...

1. அனுபவமிகுந்த தமிழ் சுருக்கெழுத்தாளர் இருவரும்;
2. ஆங்கிலத்தில் இருந்து தமிழில் மொழி பெயர்க்கும் ஆற்றல்மிக்க அனுபவமுடைய இருவரும்;
3. அச்சுப்பிழை திருத்தும் அனுபவ மிகுந்த இருவரும்;
4. கேலிச் சித்திரம் (கார்டூன்) வரையும் திறம்படைத்த ஓவியர் இருவரும் தேவை.

விரும்பும் ஊதியம், இதர விபரங்களுடன் விண்ணப்பிக்கவும்.

ஏ. வி. பி. ஆசைத்தம்பி,
(ஆசிரியர்: 'தனி அரசு')
5, வில்லேஜ் ரோடு, நுங்கம்பாக்கம்,
சென்னை—6

மாஸ்கோ வானொலி...

[5-ம் பக்கத் தொடர்ச்சி]

பர்மாவிலே படையை மோதினன் தமிழன்; இது பழங்கதை! அப்படிக் குருதிச் சேற்றைக் குழைத்து, ஈட்டி முனையால் வீரக் கவிதை தீட்டிய அந்தப் பரம்பரையின் பேரன் இன்று இல்லாமலில்லை; ரப்பர் தோட்டத்திலே கூலியாக உழைக்கிறன்!

சிங்களத்திலே சின வேங்கைப் புலியாகப் பாய்ந்தானே; அவனது சொந்தக்காரன் இன்று சிற்றெறும்புபோல் நசுக்குண்டு சித்திரவதைபட்டு வாழ்கிறன் அங்கு!

ஆகவே, 'பாரத'த்தில் மட்டுமல்ல; 'உலகெல்லாம்' தமிழருண்டு பாரீர்!

— இப்படியாக மாஸ்கோ வானொலிக்குக் கண்டனக் கணை ஒன்று சென்றிருக்கிறது!

எங்கிருந்து என்கிறீர்களா?

எத்திசையும் புகழ் சேர்த்து முத்தமிழர் அரசாண்ட தமிழ் மண்ணிலிருந்தா?

இல்லை; இல்லை!

"இமிழ் கடல் வேலித் தமிழகம்" என்ற சிலப்பதிகாரப் பாடல் உணராது, 'இலக்கியத்திலே ஏது தமிழகம்?' என்று கேட்கிறர்களே; அந்தக் கலங்கிய குட்டைபோல் கருத்துத் தெளிவற்ற குருட்டுமதி படைத்தவர்கள் வாழும் தமிழகத்திலிருந்தா?

இல்லை; இல்லை!

தமிழனென்று நடமாடினல் உடனே தலையறுக்கும் குணம் படைத்த சிங்களத்தார் நாட்டிலே இருந்து சினம் கலந்த இந்தக் குரல் எழும்பியிருக்கிறது!

'மொழி காக்கப் புறப்பட்டால் பழிதீர்க்கத் துணிவேன்' என்று பதவி வேகத்தோடு குமுறுகிறரே பண்டார நாயகா — அங்கே சாவுக்கும் வாழ்வுக்குமிடையே போராடிக் கொண்டிருக்கும் நேரத்திலேதான் இந்த மானம் காக்கும் மறுப்பு கிளம்பியிருக்கிறது!

"உலகெல்லாம் என்று மீண்டும் அழைப்பீர்!"

—என மாஸ்கோ வானொலிக்கு தீர்மானம் அனுப்பியிருக்கின்றனர்; கொழும்பு தமிழ்ச் சங்கத்தினர்!

"பாரதம் என்கின்ற சொல் தமிழன் பண்பாட்டுக்கு மாசு பூசுகிறது; மேலும், குறிப்பிட்ட எல்லைக்குள் மட்டும் குவிந்து கிடப்பவனல்ல தமிழன்; உலகெங்கும் அவன் வசிக்கிறன்; ஆகவே 'உலகெல்லாம்' என்பதே நேர்மை!" என்று நீண்ட கடிதம் அனுப்பி, தம் கடமையைச் செய்துவிட்டனர் அவர்கள்!

ஆயிரக் கணக்கான மைல்களுக்கப்பால் இருக்கின்ற வானொலியிலே தமிழருக்கு இழுக்கு என்றதும் சினந்தெழுகின்றது வேற்று நாட்டிலே வாழச் சென்ற தமிழினம்!

ஆனல், இங்கிருக்கும் எத்தர்களோ 'ஆகாஷ்வாணி' தான் வேண்டும் என்று ஆர்ப்பரிக்கிறர்கள்; 'வானொலி' என்றல் காதவழி ஓடுகிறர்கள்!

தாயின் பெயரையே ஏற்க மறுத்த அந்த எத்தர்களது வருங்காலத்தைக் கையிலே வைத்திருக்கும் தமிழ்ப் பெருங்குடியே! நீயே பதில் சொல்!

— சொர்ணம்

மனிதனின் கதை...

[6-ம் பக்கத் தொடர்ச்சி]

கள் நம்பிய கடவுளின் துணையும் இருந்ததாலேயே அவர்கள் வெற்றி பெற்றர்கள் என்றும் அடில்லா, நம்பினன். ரோமானியத் தளகர்த்தன் ஒருவனை நியமித்துத் தன் படைகளுக்குப் பயிற்சியளித்தான். டான்யூப் நதிக்கரையில் அழகான நகரமொன்று நிறுவினன்.

தன்னுடைய அறுபத்தி நான்கு புதல்வர்களையும் படைத் தலைவர்களையும் அழைத்து மந்திராலோசனை புரிந்தபின், செலான் போருக்கு ஓராண்டுக்குள்ளாகவே, மீண்டும் ரோம் மீது படையெடுத்தான். பல நகரங்கள் பாழாயின. கோடையின் கொடுமை தாங்கமாட்டாமல் அடில்லாவின் படையில் எண்ணற்ற படை விரர்கள் காலமாயினர். ரோமானியத் தளகர்த்தன் ஆக்டியஸ் இதைத்தான் ஆவலோடு எதிர்பார்த்தான்.

ஆனல், அடில்லாவோ இதையெல்லாம் பொருட்படுத்தாமல் ரோம் நோக்கிச் சென்றன். வழியில் சிறிது தூரத்துக்கப்பால் படையென்று எதிர் நோக்கி வருவதைக் கண்டான். வந்ததோ போர்ப் படையல்ல; போப்பாண்டவர் லியோ தலைமையில் வந்த பாதிரிகளடங்கிய சமாதானத் தூதுப்படை!

போப்புடன் அடில்லா சிறிது நேரம் தனிமையில் பேசியபின், தன் படைகளைப் பின் வாங்கிச் செல்லும்படி உத்தரவிட்டான். அதன் காரணமென்ன வென்பது சரித்திரத்தில் இன்னும் பெரிய புதிராகவே இருக்கிறது.

தன் நகர் திரும்பிய அடில்லா, மீண்டும் ரோம்மீது படையெடுக்க எண்ணினன். அவனுடைய எண்ணம் நிறைவேறுமுன், மனித இனத்தின் பயங்கர எதிரியாகவும், மாமன்னர்களுக்கு சிம்ம சொப்பனமாகவும் விளங்கிய அடில்லாவை மரண தேவதை தன் மடியிலே அணைத்துக் கொண்டாள்.

தனது மரணத்துக்கு முன்னல் நானூற்று ஐம்பதாவது முறையாக அடில்லா, இல்டிகோ என்ற ஜெர்மானிய அழகியைத் திருமணம் செய்து கொண்டான். திருமணம் முடிந்து, அந்தத் தேன் இதழாளோடு உறங்கப் போன அடில்லா, மறுநாள் காலையில் எழுந்திருக்கவே இல்லை. அவனுடைய வெள்ளைக் கம்பளங்கள் இரத்தத்தினல் செந்நிறமடைந்திருந்தன. மிதமிஞ்சிய குடியால் இரத்தநாளம் வெடித்து அடில்லா மாண்டு போனதாக வரலாறு கூறுகிறது.

அவனுடைய இளம் மனைவி இல்டிகோவின் பெற்றோர்களைக் கொன்ற பின்பே அவளை அடில்லா திருமணம் செய்து கொண்டான் என்ற செய்தியிலிருந்து அடில்லாவின் மரணத்துக்கு இல்டிகோவும் பொறுப்பாளியாக இருந்திருக்கக்கூடும் என்ற யூகம் தவறில்லை.

அடில்லாவின் சவம் இடுகாட்டுக்குச் சுமந்து செல்லப்பட்டது. அந்த வம்சத்தின் வழக்கப்படி நான்கு போர்வீரர்களைக் கொன்று இரத்தத்தால் சடலத்தைக் குளிப்பாட்டியபின் புதைக்கப்பட்டது.

அடில்லாவின் மரணத்துக்கு மறுநாள் ஐரோப்பிய நகரங்கள் நிம்மதியாகத் தூங்கின!

அன்புள்ள
அகத்தியன்.

ஆசிரியரும், அச்சிடுபவரும், வெளியிடுபவரும் மு. கருணாநிதி, முரசொலி அச்சகம், 4—128, மவுண்ட் ரோடு, சென்னை-2, தமிழ்நாடு